## 2. அகத்தியர் வேள்வியைத் தடுத்த கதை

முன்காலத்தில் முனிவர்கள் பலர் ஒன்று கூடி ஒரு வேள்வியைச் செய்ய தொடங்கினார்கள். அவ்வேள்வியில் கொல்வதற்கு ஆடு ஒன்றையும் ஏற்பாடு செய்திருந்தார்கள். அகத்திய முனிவர் அவ்விடத்திற்குச் சென்றார்; கலங்கி நிற்கும் ஆட்டினைக் கண்டார்.

உயிர்க்கொலை புரிந்து வேள்வி செய்வதால் ஏற்படக்கூடிய பயன் ஒன்றும் இல்லை. எவ்வளவு பெரிய மேன்மை எய்துவதாக இருந்தாலும் சரி உயிர்க்கொலையால் வருவதனை நாம் உவந்துகொள்ளலாகாது என்று அறவுரைகள் கூறினார். அம்முனிவர்கள் அசத்தைக் கொண்டு வேள்வி செய்வதில் தவறு என்ன? மறைகள் இதனை ஒப்பியுள்ளனவே' என்று செப்பினர்.



அதற்கு அகத்தியர் 'அசத்தைக்கொண்டு வேள்வி புரியச் சொல்லியிருக்கிறது. அசம் என்பது ஆட்டையும் மூவாண்டு நெல்லையும் குறிக்கும். ஈண்டு நெல்லைத்தான் கொள்ள வேண்டும்' என்று கூறி மூவாட்டை நெல்லைக் கொண்டே வேள்வியைச் செய்து முடித்தார்.

பெரியோர்களாயுள்ளவர்கள் கொலை வினையால் வரும் உயர்நிலையை ஒரு பொருளாக எண்ணி மகிழார்கள். உயிர்களிடத்தில் அருளுடையராக இருத்தலையே அவர்கள் பாராட்டுவார்கள் என்பது அன்று அகத்தியரிடம் நன்கு விளங்கியது.

(அருளுடைமை)